**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 50/2022**

**Date : 03.02.2026**

**வா.சா. 2 – வெங்கடாசலம்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் கன்னியாகுமரி பூம்புகார் கார்பரேஷனில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு திருமணம் எப்போது நடைபெற்றது என்றால் 1982 ல். எனக்கு வேலை கிடைத்து திருமணத்திற்கு பின்பு சுவாமிநாதபுரத்தில் வசித்து வருகிறேன் என்றால் 1994 ல் இருந்து சுவாமிநாதபுரத்தில் இருந்து வருகிறேன். சுவாமிநாதபுரத்தில் சொந்த வீடு வாங்கி வசித்து வருகிறேன் என்றால் சொந்த வீட்டை விற்று விட்டேன். நான் மகாராஜபுரம் வீரமார்த்த விநாயகர் என்று குறிப்பிடுவது பஞ்சலிங்கபுரத்தில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல அது தவறு மகாராஜபுரத்தில் தான் உள்ளது. நான் மேற்படி கோவிலுக்கோ அந்த ஊருக்கோ டிரெஸ்டியாக இல்லை என்றால் சரிதான். கோவின் தற்போதைய டிரெஸ்டி யார் என்றால் பொன்னப்பன். மேற்படி கோவிலில் டிரெஸ்டி செயல்படுகிறது என்றால் சரிதான். நான் டிரெஸ்ட் சார்பாக சாடசியம் அளிக்கவரவில்லை என்றால் சரிதான். நான் வாதியுடன் வாதி சாட்சியம் அளிக்கும் சமயம் வந்திருந்தேன் என்றால் சரிதான். வாதியின் முதல்விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை படித்துபார்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. அவருடன் வரும் சமயம் அவர் சாட்சியளித்ததை நான் பார்த்துள்ளேன் என்றால் பார்க்கவில்லை.

வாதி அளித்த சாட்சியம் சரியா நான் அளித்த சாட்சியம் சரியா என்றால் நான் கூறுவது தான் சரி. வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. வழக்கு

பட்டிகை சொத்திற்கான ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. இவ்வழக்கில் உள்ள வழக்கு பட்டிகை சொத்து எங்கள் கோவிலுக்கோ சமுதாயத்திற்கோ சம்மந்தமில்லை என்றால் சரிதான். நான் ஆவணங்களை குறித்து கூறியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் 5ம் வரியில் டிரெஸ்டு கைமாற்று பத்திரம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மீனாட்சி சுந்தரத்தின் தகப்பனாருக்கு தனிப்பட்ட முறையில் சொத்தை கொடுத்ததாக வா.சா.ஆ.1ல் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் கோவிலிற்கான வழிபாடுகளை செய்யவேண்டும் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி மீனாட்சி சுந்தரத்தின் மொத்த குடும்பத்திற்கும் உரிமைப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

நான் வருவாய் ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் எனக்கு அவசியமில்லை. ஆகையால் வருவாய் ஆவணங்களில் வழக்கு பட்டிகை சொத்து யார் பெயரில் உள்ளது என்று கூற இயலாது என்றால் கணபதியா பிள்ளை பெயரில் உள்ளது. வா.சா.ஆ.6 ல் நடராஜ கோவில்வகை மகாராஜபுரம் வீரமார்த்தாண்ட விநாயகர் கோவில் காப்பாளர் என்று உள்ளது என்றால் சரிதான் மேலும் கோபாலராமகிருஷ்ண பிள்ளை, கணபதியா பிள்ளைக்கு எழுதி கொடுத்ததாகவும் உள்ளது. வா.சா.ஆ.6 ல் சர்வே எண்.40/21 என்று உள்ளது என்றால் வா.சா.ஆ.6 யை பார்க்க வேண்டிய அவசியமில்லை. நான் வாதி தாக்கல் செய்த ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்க தயாராக இல்லை என்றால் சரிதான். 1992 ல் கணபதியா பிள்ளைக்கு விலையாதாரம் கொடுத்ததாக கூறப்படும் ஆவணத்தை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். வேலாயுதம் பிள்ளை மேலும் கூடுதல் தொகைக்கு விலைக்கு கொடுத்ததை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி இரண்டு ஆவணங்களையும் பார்க்காததால் அதில் என்ன விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று

தெரியாது என்றால் சரியல்ல சொல்லி தெரியும் பார்த்ததில்லை.

மேற்படி இரண்டு ஆவணங்களையும் பிறர்சொல்லும்படி கேள்விப்பட்டதன் படி கைமாற்றம் ஏற்பட்டதாக இல்லை என்றால் ஆவணத்தில் கூறப்படவில்லை ஆனால் கைமாறி உள்ளது. எந்த ஆண்டு, மாதம் கைமாறியது என்றால் 1995 ல் கைமாறியதாக கூறினார்கள். தற்போது வழக்கு பட்டிகை சொத்து யார்கைவசம் உள்ளது என்றால் சொர்ணகுமார் கைவசம் உள்ளது. மேற்படி சொத்திற்கு வட்டி எவ்வளவு என்றால் தெரியாது. வட்டி தெரியாததால் என்ன வட்டிதொகைக்கு சொத்து கைமாறியது என்பது குறித்து தெரியாது என்றால் சரிதான். தற்போது வழக்கு பட்டிகை சொத்து தரிசாக கிடக்கிறது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். செங்கள் சுள்ளை உள்ளதா என்றால் ஆம் செங்கல்சுள்ளையும் உள்ளது. பயிர் எதுவும் வழக்கு பட்டிகை சொத்தில் இல்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து சைவபிள்ளைமார் சொத்துக்கு உரிமைப்பட்டதா என்றால் இல்லை. வீரமார்த்தாண்ட விநாயகர் கோவில் சொத்து சைவபிள்ளைமார் சமுதாயத்திற்கு உரிமைப்பட்டதா என்றால் ஆம். நான் மேலே குறிப்பிட்ட தனிப்பட்ட டிரெஸ்டு சைவபிள்ளைமார் சமுதாயத்திற்கு உரிமைப்பட்டதா என்றால் இல்லை. நான் மேலே குறிப்பிட்ட தனிப்பட்ட டிரெஸ்டு சைவபிள்ளைமார் சமுதாயத்திற்கு உரிமைப்பட்டதா அல்லது வீரமார்த்தாண்ட விநாயகர் கோவிலுக்கு உரிமைப்பட்டதா என்றால் இரண்டிற்கும் அல்ல.

கணபதியா பிள்ளை ஒரு டிரெஸ்ட் உருவாக்கியதாக கூறியுள்ளேன் அது எந்த ஆண்டு, தேதி உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது என்றால் ஆண்டு தேதி தெரியாது. மேற்படி டிரெஸ்டில் யார் உறுப்பினர் என்றால் கணபதியா பிள்ளை மட்டும் தான் உறுப்பினர் மேற்படி டிரெஸ்டின் வருமானத்தை கொண்டு வீரமார்த்தாண்ட விநாயகர் கோவில்

இருகால பூஜைகள் நடைபெற்று வருவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். கடைசியாக மேற்படி டிரெஸ்டுக்கு பிரதிவாதிகள் எப்போது வட்டி பணம் கொடுத்தார்கள் என்றால் அது பற்றி தெரியாது. கணபதியா பிள்ளை உயிருடன் இருந்தகாலம் வரை அவர் கொடுத்து வந்தார் அதற்குபின் அவரது மகன் கொடுத்தார். கணபதியா பிள்ளை எந்த ஆண்டு இறந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கணபதியாபிள்ளை தந்தை எந்த ஆண்டு இறந்தார் என்றால் நியாபகம் இல்லை. மேற்படி கோவிலில் தற்போதும் இருகால பூஜைகள் நடந்து வருகிறது என்றால் சரிதான். வாதி தற்போது மேற்படி ஊரில் தாமசம் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தற்போது எங்கே தாமசம் என்றால் ஊரில் இல்லை. தற்போது மேற்படி கோவிலில் பூஜை யார் நடத்திவருகிறார்கள் என்றால் ஊரில் உள்ளவர்கள்.

மேற்படி ஊரில் உள்ளவர்கள் எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் மட்டும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களில் நான் சாட்சியாக இல்லை என்றால் சரிதான். தற்போது எங்கள் மகாராஜபுரம் ஊரில் எங்கள் சமுதாயத்தை சர்ந்த குடும்பம் மொத்தம் எத்தனை உண்டு என்றால் 20 குடும்பம். எனது மைத்துணன் பெயர் பரமசிவம் என்ற கண்ணன் என்றால் சரிதான். மேற்படி பரமசிவம் என்ற கண்ணனும் வழக்கின் வாதியும் நண்பர்கள் என்றால் சரியல்ல மைத்துணர்கள். நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு சமுதாயத்தில் இருந்து எவ்வித அனுமதியும் கேட்டுவரவில்லை என்றால் சரிதான். மேற்படி வீரமார்த்தாண்ட விநாயகர் கோவில் சமுதாயத்தின் கையில் உள்ளதா இந்து அறநிலையதுறையின் கையில் உள்ளதா என்றால் சமுதாயத்தின் கையில் உள்ளது. வாதி எனது மைத்துனரின் மைத்துனர் என்பதால் வாதிக்கு வேண்டி இவ்வழக்கை பற்றி விபரம் தெரியாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியை தூண்டிவிட்டு

வழக்கு தாக்கல் செய்ய வைத்தது நான் தான் என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது**.